**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 187 /2024 |
| Deposition of witness | | PW- 3 /LW- 4 |
| Name | | திரு. ராமசாமி |
| Father's/Husband Name | | திரு. ரெங்கசாமி |
| Village | | நெய்வேலி, தென்பாதி |
| Taluk | | திருவோணம் |
| Age | | 59/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of October 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற இரண்டாம் நிலை காவலர் 1375 திரு.மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் நெய்வேலி தென்பாதி தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் எனது ஊரை சேர்ந்தவர்கள். அ.சா.1,2 ஐ தெரியும் அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் நேரடியாக பார்க்கவும் இல்லை கேள்விபடவும் இல்லை. அசா 1 னு ஆஜர் எதிரிகள் மீது புகார் மனு கொடுத்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் 20.09.2015 ந் தேதி ஞாயிற்றுகிழமை மாலை 3.00 மணிக்கு நான் கறம்பக்குடி செல்வதற்காக நான்

சென்றுகொண்டிருந்தபோது நெய்வேலி மழவராயர்தெருவில் சென்று கொண்டிருந்தபோது அ.சா.1 சுதாகர் வீட்டு வாசலில் கூட்டமாகவும் இரச்சலாகவும் சண்டை போட்டுக்கொள்ளும் சத்தம் கேட்டது என்றும் நான் அங்கு சென்று பார்த்தபோது அ.சா.1 சுதாகரும் , அ.சா.2 செல்லதுரையும் கையில் இரத்த காயத்துடன் இருந்தார்கள் என்றும் நான் என்னவென்று விசாரித்தபோது ஆஜர் எதிரிகள் காலையில் விநாயகர் ஊர்வலம் போகும் போது நடராஜன் வீட்டு வாசலில் வெடி வெடித்தது சம்மந்தமாக காலையில் பிரச்சனை நடந்தது என்றும் அது சம்மந்தமாக தங்கள் இருவரையும் தற்போது தகராறு செய்து அடித்து காயப்படுத்திவிட்டதாக சொன்னார்கள் என்றும் அப்போது எதிரி பாலமுருகன் கையில் ஒரு கம்பு வைத்து இருந்தார் என்றும் எதிரி திருமுருகன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பை காட்டி உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும் நான் சத்தம் போட்டு விலக்கிவிட்டு அ.சா.1 சுதாகரையும் அ.சா.2 செல்லதுரையும் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும் இது சம்மந்தமாக அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரித்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்த நபர்கள் மற்றும் உறவினர்கள் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/– திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை